DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.358-2016** |
| Deposition of witness for | - P.W. 1 |
| Name | - steephen |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.09.2021

**முதல் விசாரணை:**

நான் கேரளா மாநிலத்தில் உள்ள சூரியநெல்லி கிராமத்தில் தச்சு வேலை செய்து வருகிறேன். என்னுடன் என் மனைவி சின்னதாய் வசித்து வருகிறார். 03.11.2015ம்ஆண்டு சிவகாசியில் உள்ள சிவா மருத்துவமனைக்கு என் மனைவி சின்னதாயை கர்ப்பப்பை ஆப்ரேசனுக்காக சிவப்பு கலர் காரில் அழைத்து வந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள காரில் தான் நானும் என் மனைவியும் வந்தோம் கார் போட்டோக்கள் 2 சிடி யுடன் உள்ளது. அந்த கார் அ.சா.பொ.1 வரிசை என் மனைவிக்கு சிகிச்சை முடித்து விட்டு 11.11.2015 அன்று நாங்கள் அதே காரில் திரும்பி வரும்போது பேரையூர் மொக்கு ரோட்டில் டீ குடிப்பதற்காக நிறுத்தினோம். அப்போது மதியம் 11.00 மணியிருக்கும். எனது காருக்குள் எனது மனைவி மட்டும் உள்ளே உட்கார்ந்து இருந்தார். சிகிச்சையிலிருந்து வந்ததால் எனது மனைவிக்கு காரில் ஏசி ஓடவிட்டு நானும் டிரைவர் சுரேசும் இறங்கி டீ வாங்குவதற்காக கடைக்கு போனோம். ஆள்பார்த்தால் அடையாளம் தெரிந்த நபர் எனது காரை எடுத்துக்கொண்டு பயங்கர வேகத்தில் சென்றார். ஒரு 100மீ தள்ளி மற்றொரு நபர் பைக்கை நிறுத்திவிட்டு காரில்ஏறி சென்றார். அவர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். அவர்கள் தான் இவ்வழக்கில் ஆஜர் ஆகியுள்ள எதிரிகள். பின்னர் அந்த காரில் எனது மனைவியையும் கடத்தி சென்றுவிட்டனர். நான் உடனே பேரையூர் காவல் நிலையத்திற்கு

சென்று எனது மனைவியை காருடன் கடத்தி சென்று விட்டனர் என்று சொன்னேன். காரில் ரூ.2000 பணம் வைத்திருந்தேன். காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. நான் சொல்ல புகார் எழுதப்பட்டது. அந்த புகார். அ.சா.ஆ.1. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று படிக்கத் தெரியும். புகாரைகாவல் நிலையத்தில் வைத்து போலிசார் எழுதினார்கள். காரை டீ கடைக்கு அருகில் நிறுத்தியிருந்தேன். நான் டீ கடையில் இருந்து சத்தம் போட்டால் காருக்குள் கேட்காது காரில் ஏசி போட்டிருந்தது. முதல் விசாரணையில் அடையாளம் தெரிந்த நபர் காரில் ஏறினார் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எனக்கு காரில் ஏறிய நபர் யாரென்று தெரியாது. காவல் நிலையத்தில்வைத்து எதிரிகளை காட்டியபிறகு தான் எனக்கு தெரியும். அவர்களது பெயர்களும் அப்போது தான் தெரியும். காரை தொடர்ந்து ஓட்டும் பொழுது எனது மனைவி சத்தம் போட்டது எனக்கு கேட்கவில்லை. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் என் டிரைவர் சாட்சி கையெழுத்து போட்டாரா என்று தெரியாது. போட்டிருக்கவேண்டும். மருத்துவமனையில் இருந்து டீ கடைக்கு தான் நேரடியாக வந்தோம். 100 மீ தள்ளி மற்றொருவர் பைக்கை நிறுத்தி விட்டு என்னுடைய காரில் ஏறி சென்றார் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். நான் சொல்லியவாறு சொன்னநேரத்தில் சொன்ன விதத்தில் புகார் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 1வது எதிரி காரை கடத்தி போனதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி நாங்கள் மருத்துவமனையில் இருந்த காலத்தில் எனக்கு ஓட்டுனராக இருந்தார் என்றும் அப்போது அவருக்கும் எனக்கும் சம்பளத் தகராறு இருந்ததென்றும் அதில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் தான் பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் டீ கடையில் வாகனத்தை மதியம் 11.00 மணிக்கு நிறுத்தினோம் என்று சொன்னோம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஅவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.358-2016** |
| Deposition of witness for | - P.W. 2 |
| Name | - Chinnathai |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.09.2021

**முதல் விசாரணை:**

நான் கேரளா மாநிலத்தில் உள்ள சூரியநெல்லி கிராமத்தில் வசிக்கிறேன். அ.சா.ஆ.1 எனது கணவர். நான் எனது வீட்டுக்காரருடன் 03.11.2015ம் ஆண்டு சிவகாசியில் உள்ள சிவா மருத்துவமனைக்கு கர்ப்பப்பை ஆப்பரேசன் செய்வதற்காக சென்றோம். 11.11.2015 அன்று சிவப்பு கலர் காரில்வந்தோம். டிரைவரும் எனது வீட்டுக்காரரும் டீ குடிக்க சென்றனர். நான் மட்டும் காரில் ஏசி போட்டு இருந்தேன். பேக்கில் ரூ.2000 வைத்திருந்தேன். அப்போது மதியம் 12.00 மணியிருக்கும் அப்போது அடையாளம் தெரிந்த ஒரு நபர்வந்து காரை எழுத்து வேகமாக சென்றார் நான் ஏன் எடுக்கிறீர்கள் என்று கேட்டேன் நான் காரை மாற்றி போடத்தான் வந்தேன் என சொன்னார். நான் கண்ணாடியில் பார்த்து கத்தினேன் கொஞ்ச தூரம் சென்ற பிறகு இன்னொருவர் வந்துகாரில் ஏறினார். அவர்களை பார்த்தால் எனக்கு தெரியும். அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். ஆஜர் எதிரிகளில் கண்ணாடி போட்டநபர் தான் காரை ஓட்டி சென்றவர்(சாட்சி 1 வது எதிரியை அடையாளம் காட்டுகிறார்.) காரில் கொஞ்ச தூரம் கூட்டிச்சென்று மின்சார வாரிய அலுவலகத்திற்கு அருகில் காரை விட்டுவிட்டு ஓடிவிட்டனர். ரூ.2000 யை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டனர். அதன் பின் அருகில் இருந்தவர்கள் எனக்கு தண்ணீர் தெளித்து காவல்நிலையத்திற்கு கூட்டிச் சென்று பின் அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

அங்கு என்னை பரிசோதனை செய்த மருத்துவர்கள் சிகிச்சை கொடுத்தார்கள். சாட்சி 2வது எதிரியை அடையாளம் காட்டி அவர் தான் என்னை குத்திப்புடுவேன் என்று மிரட்டினார். என்னிடம் காண்பிக்கப்படும் பணம் எனது காரில் இருந்த பணம் அது அ.சா.பொ.2வரிசை அந்தபணத்தில் எத்தனை 500 ரூபாய் தாள்கள் என்றும் எத்தனை 100 ரூபாய் தாள்கள் என்றும் எனக்கு ஞாபகம் இல்லை. மொத்தம் ரூ 2000. போலிசார் என்னை விசாரித்தனர். 02.12.2015ம் நாள் மதுரை மத்திய சிறைக்கு எதிரிகளை அடையாளம்காட்டுவதற்கு என்னை அழைத்து சென்றனர். நீதிபதி வந்தார் அவர் முன்பாக நான் எதிரிகள் இருவரையும் அடையாளம் காட்டினேன். ஆஜர் எதிரிகளை சுமார் 10,15 நபர்களுடன் இருந்தவர்களை நான் அடையாளம் காட்டினேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவத்திற்கு பிறகு கார் நின்ற பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள் காரை எடுத்து சென்ற பிறகு சுமார் 20 நிமிடத்தில் போலிசார் என்னை விசாரித்தனர். என் பெயர் முகவரி அனைத்தையும் போலிசார் விசாரித்தனர். என்ன நடந்தது என்று விசாரித்தனர். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். அங்கு என் கணவர் இருந்தார். காரில் போகும் போது காருக்கு பின்னால் போலிசார் வந்து விரட்டியதால் காரை நிறுத்தி விட்டு ஓடிவிட்டனர். சம்பவத்தில் ஈடுபட்டவர்களை பிடித்து காவல் நிலையத்தில் விசாரித்தனர். எனது வீட்டுக்காரர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார். நான் மருத்துவமனைக்கு சென்று எதனால் இந்த காயம் எத்தனை பேரால் இந்தகாயம் என்று கூறினேன். பேரையூர் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் அதனை குறித்து வைத்து கொண்டனர். பேரையூர் மருத்துவரிடம் நான் சிகிச்சைக்கு சென்றபோது என் வீட்டுக்காரருக்கும் எனக்கும் 1வது எதிரிக்கும் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் இந்த காயம் ஏற்பட்டது என்று நான் சொல்லவில்லை. போலிசார் ' விசாரணையில்ரூ2000 என்னென்ன வகையில் இருந்ததென்று நான் சொல்லவில்லை. ஆனால் அதிலுள்ள 2 தாள்கள் மட்டும் ரூ 500 மற்ற தாள்களை பற்றி தெரியாது. மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ச் ஆகும் போது காலை 10.00 மணியிருக்கும் அடுத்த அரை மணிநேரத்தில் டீ கடைக்கு வந்து விட்டோம் அதற்கு இடையில் வேறு எங்கும் செல்லவில்லை. போலிசார் விசாரணையில் எதிரி காரை எடுத்த போது அதை மாற்றுவதற்கு தான் வந்தேன் என்று சொன்னதை விசாரணையில் சொல்லியுள்ளேன். கண்ணாடியை பார்த்து சத்தம் போட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. மதியம் 12.00 மணிக்கு டீ கடையில் நிறுத்தியிருந்தோம் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை மருத்துவசிகிச்சை எடுத்துக்கொண்ட ஆவணங்களை போலிசார் பெற்றுக்கொண்டனர். காணாமல் போன பேக்கில் போலிசார் கொடுத்தார்களா ' என்றால் பதற்றத்தில் எனக்கு தெரியாது. காவல்நிலையத்தில் போலிசார் என்னிடம் ரூபாயை காண்பித்தார்களா என்றால்நான் பார்க்கவில்லை. மருத்துவமனையில் நான் இருந்த காலத்தில் 1வது எதிரி என் காரை ஓட்டிவந்த போது நிலுவையில் இருந்தபணத்தை கொடுக்காததால் ஏற்பட்ட தள்ளுமுள்ளு

பிரச்சணையில் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 1வது எதிரி காரை கடத்தவில்லை என்றும் 2வது எதிரி- ரூபாய் 2000 பறிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தில் எதிரிகளை பார்த்ததன் அடிபப்டையில் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான். அதேபோல் போட்டோவை காண்பித்து போலிசார் அடையாளம் காட்டினார்கள் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் 2வது எதிரி கத்தியை காட்டி மிரட்டினார் என்று சொன்னேனா இல்லையா என்று ஞாபகம் இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஅவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமா்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.